ராதாபுரம் ஒன்றியம்

சமூக ரெங்கபுரத்தில் துவரை பயிர் தொழில்நுட்ப பயிற்சி

வேளாண்மை துறை அதிகாரிகள் பங்கேற்பு

திசையன்விளை. செப்.22–

நெல்லை மாவட்டம் ராதாபுரம் ஒன்றியம் சமூக ரெங்கபுரத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் குறுகிய கால துவரை பயிர் பயிரிடஊக்குவித்தல் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் மோகன் அறிவுறுத்தலின் படி நடந்தப்பட்டது. வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜாய் பத்மா தினேஷ் வரவேற்புரை அளித்துவேளாண்மைத்துறையின் திட்டங்கள் பற்றியும் அதன் மானியதிட்டங்களை பற்றியும் விரிவாக கூறினார்.ஓய்வுபெற்றவேளாண்மை அலுவலர் மனோகரன் துவரை பயிரின் சாகுபடி தொழில்நுட்பமுறைகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் லக்ஷ்மண நாராயணன் துவரை பயிரின் நன்மைகள் பற்றியும், அதன்னை சந்தை படுத்தும் முறைகளை விளக்கி கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் சரிகா உழவன் செயிலி பற்றி விரிவாக கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் சுபா நன்றியுரை கூறினார்.

பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி சார்பில்

போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி

ஆலங்குளத்தில் நடந்தது

ஆலங்குளம், செப்.22–

நல்லூர் ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி சார்பில் ஆலங்குளத்தில் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

ஆலங்குளத்தில் வட்ட சட்டப்பணிகள் குழு மற்றும் நல்லூர் சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி இணைந்து போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். ஆலங்குளம் காவல் நிலையம் முன்பு தொடங்கிய இப்பேரணி பேருந்து நிலையத்தில் நிறைவு பெற்றது.

கல்லூரி மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச்சென்றனர்.தொடர்ந்து பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. பின்னர் போதைக்கு எதிரான உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் ஜேசுஜெகன் தலைமை வகித்தார். முதல்வர் வில்சன், வரவேற்றார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் காசிபாண்டியன், திமுக பேரூர் செயலாளர் நெல்சன், ஆலடி மானா, சாந்தகுமார், வைதிலிங்கம் பால்ராஜ், பேராசிரியர்கள் ஜெயடேவிசன், இம்மானுவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஜோகன்னா நன்றி கூறினார். பேரணியை பேராசிரியர்வில்சன் எவர்பிரைட் ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.

ஆரல்வாய்மொழி அருகே

கேரளாவுக்கு கடத்த முயன்ற 2 டன் ரேசன் அரிசி பறிமுதல்

போலீசார் நடவடிக்கை

நாகர்கோவில்,செப்.22–

தென்மாவட்டங்களில் இருந்து ரேசன் அரிசியை சிலர் வீடு வீடாக குறைந்த விலைக்கு வாங்கி அதிக லாபத்திற்கு வாகனங்களில் கேரளாவுக்கு ரயிலிலும், பிற வாகனங்களிலும் கடத்தி வருகிறார்கள். சில நேரங்களில் தப்பிப்பதும், போலீசாரிடம் மாட்டிக்கொள்வதும் உண்டு.

இந்நிலையில் நேற்று வெள்ளமடம் அருகே உள்ள நால்கால் மடம் பெட்ரோல் பங்கில் 4 நாட்கள் மூடிய கூண்டுடன் மினிவேன் ஒன்று நின்றது.

இதில் சந்தேகம் அடைந்த சிலர் ஆரல்வாய்மொழி காவல் நிலையத்திற்க்கு தகவல் அளித்ததின் பெயரில் ஆரல்வாய்மொழி காவல் ஆய்வாளர் அன்பு பிரகாஷ் உத்தரவின் பெயரில் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் மகேந்திரன், ஏட்டு செந்தில், நடராஜன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அங்கு பெட்ரோல் பங்கில் அனாதையாக நின்ற மினிவேனை திறந்து பார்த்தனர். அதில் மூட்டை மூட்டையாக ரேசன் அரிசி இருந்தது தெரிய வந்தது. உடனே அரிசியுடன் வேனை ஆரல்வாய்மொழி காவல்நிலையம் கொண்டுவந்தனர். பின்னர் ரேசன் அரிசி நாகர்கோவில் உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் குறித்து பெட்ரோல் பங்கில் உள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்து ரேசன் அரிசி கடத்தி வந்தவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

நெல்லை மாவட்ட பஞ்சாயத்து தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் கட்டி முடிக்கப்பட்ட கலையரங்கத்தினை திறந்து வைத்தார்.

ராதாபுரம் ஒன்றியம்

கஸ்தூரிரெங்கபுரத்தில் கலையரங்கம்

நெல்லை மாவட்ட பஞ்சாயத்து தலைவர் திறந்து வைத்தார்

திசையன்விளை. செப்.22–

நெல்லை மாவட்ட பஞ்சாயத்து தலைவர் வி .எஸ். ஆர் .ஜெகதீஷ் கட்டி முடிக்கப்பட்ட கலையரங்கத்தினை திறந்து வைத்தார்.

திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் ஒன்றியம் கஸ்தூரி ரங்கபுரம் ஊராட்சியில் நெல்லை மாவட்ட பஞ்சாயத்து நிதியின் மூலம் நிர்வாகி 9.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பணிகள் முடிக்கப்பட்ட கலையரங்கத்தினை நெல்லை மாவட்ட பஞ்சாயத்து மற்றும் திட்டக்குழு தலைவர் ராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர்வி .எஸ் .ஆர். ஜெகதீஷ் திறந்து வைத்தார். கஸ்தூரி ரங்கபுரம் பகுதியை சார்ந்த மக்களின் நெடுநாள் கோரிக்கையான மக்கள் வைத்த கலையரங்கம் கட்டுவது என்று கோரிக்கினை ஏற்றி மாவட்ட பஞ்சாயத்து நிதியின் மூலம் வழங்கப்பட்டு கட்டு முடிக்கப்பட்ட கலையரங்கத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சௌமியா ஜெகதீஷ் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர் வாழவந்த கணபதி பால சுப்பிரமணியம் வரவேற்புரையாற்றினார்.

முன்னதாக கோவில் கொடை விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். அதனை தொடர்ந்து கலையரங்கம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சமூகை முரளி, மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் சுப்பையா, மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் சங்கர், ஒன்றிய கவுன்சிலர்கள் இசக்கி பாபு, பாலன்,மாவட்ட விவசாய அணி அமைச்சியார், ராதாபுரம் கூட்டுறவு சங்க தலைவர் அரவிந்தன், சிதம்பரபுரம் முருகன், ஊராட்சி மன்ற தலைவர் மணிகண்டன், ஒன்றிய செயற்குழு உறுப்பினர் ராம் கிஷோர் பாண்டியன், திசையன்விளை பேரூராட்சி கவுன்சிலர் கண்ணன், திசையன்விளை பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர் நெல்சன், பொற்கிழி நடராஜன்,உப தலைவர் இசக்கியப்பன், வார்டு உறுப்பினர்கள் கவிதா, ராமு, சுடலை, அருமை தாஸ், ஈஸ்வரி, ரமேஷா பேகம், வேலம்மாள், இசக்கியம்மாள், கோவில் நிர்வாகிகள் வேல் யாதவ் ,சுடலை ஆண்டி யாதவ் ,முத்து தாஸ், அரசன் ஆறுமுகம் ,கொம்பையா, கண்ணன், ஐயப்பன் ,குட்டி ஐயப்பன், முருகேசன் ,தில்லை வேல், சண்முக வேல், புலியடி குமார், சாகுல் ஹமீது, முத்தையா, முத்து ராஜா, வசந்தகுமார், மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

கருங்குளத்தில்

கிராமத்தை வளப்படுத்துதல் பயிற்சி முகாம்

அலுவலர்கள் பங்கேற்பு

செய்துங்கநல்லூர்.செப்.20

கருங்குளம் ஒன்றியம் அலுவலகத்தில் கிராமத்தை வளப்படுத்துதல் குறித்த ஒருநாள் பயிற்சி நடைபெற்றது.

தமிழ்நாடு வாழ்வாதர இயக்கம் சார்பில் கிராமவளமைவிரிவாக்கத்த திட்டத்தின் கீழ் ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற செயலாளர்கள், வாழ்வாதார இயக்கத்தினர் மற்றும் அரசு பணியாளர்களுக்கு ஒருநாள் சிறப்பு பயிற்சி நடந்தது. இப்பயிற்சிக்கு கருங்குளம் ஒன்றிய ஆணையாளர் முத்துகுமார் தலைமை வகித்தார். சத்துணவு மேலாளர் ஜோசப் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக கருங்குளம்; ஒன்றிய சேர்மன் கோமதி ராஜேந்திரன் கலந்து கொண்டு இப்பயிற்சியினை தொடக்கி வைத்தார். தூத்துக்குடி மகளிர் திட்ட அலுவலர் டைமன் அருள் கிராம வளமையை பெருக்குவது குறித்து பயிற்சி கொடுத்தார். முடிவில் கருங்குளம்; ஒன்றிய மகளிர் திட்ட பொறுப்பு அலுவலர் ராமுஅம்மாள் நன்றி கூறினார். இதில் கருங்குளம் யூனியனைச் சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற செயலாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆரச்சார் நிலத்தை மீட்க கோரி

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சாமியார் தீக்குளிக்க முயற்சி

போலீசார் மடக்கி பிடித்தனர்

நாகர்கோவில்,செப். 22–

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் அரசு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய சுமார் 1500 கோடி ரூபாய் மதிப்பிலான 48 1/2 ஏக்கர் ஆரச்சர் நிலம் தனி நபர் ஒருவரின் கட்டுப்பாட்டில் வைத்துவீட்டுமனைகளாக விற்ப்பனண செய்வதை தடை செய்ய கோரி நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இந்து தமிழர் கட்சி மாநில செயலாளர் ஈசான சிவம் (எ) ராஜா நேற்று காலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நுழைய முற்ப்பட்டு தான் கையில் மறைத்து வைத்திருந்த பெட்ரோல் கேனை திறந்து தலையில் பெட்ரோல் ஊற்றி தீ குளிக்க முயற்ச்சித்த போது மாவட்ட ஆட்சியர் அலுவலக பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த நேசமணி நகர் காவல் ஆய்வாளர் இக்கிதுரை தலைமையிலான பெண் காவலர்கள் அவரை தடுத்து நிறுத்தி கையில் இருந்த பெட்ரோல் , மற்றும் தீ பெட்டியினை பறித்தனர். பெண் காவலர்களின் அலறல் சத்தம் கேட்டு பாதுகாப்பு பணியில் ஈடு பட்டிருந்த சக காவலர்கள், மற்றும் அதிகாரிகள் அவரை தடுத்து நிறுத்தி கைது செய்யப்பட்டு நேசமணி நகர் காவல் நிலையத்திற்க்கு அழைத்து சென்றனர். இந்து சாமியார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீ குளிக்க முயற்ச்சி செய்தது அப்பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்ப்படுத்தியுள்ளது.

இந்த ஆரச்சார் நில விவகாரத்தில் கன்னியாகுமரி மாவட்ட அளவிலான முக்கிய பிரமுகர் மற்றும் ரியல் எஸ்டேட் பிரமுகர்கள் கைப்பற்றி விற்ப்பதற்க்கான முழு முயற்சியில் இருக்கிறார்கள். முன்பு நன்செய் நிலமாக நெல் விளையும் பூமியாக இருந்த இந்த 48 1/2 ஏக்கர் நிலம் இப்போது நாகர்கோவில் மாநகரை ஒட்டி வளர்ந்து வரும் புறநகராக மாறி நிற்கிறது. சென்னைக்கு எப்படி தாம்பரம் முக்கியமோ, அது போல நாகர்கோவிலையும் குமரி மாவட்டத்தின் இதர பகுதிகளையும் இணைக்கும் பாலமாக இருக்கும் பகுதி இந்த பார்வதிபுரம். இங்கு இன்று ஒரு சென்ட் நிலம் 35 லட்சத்திற்கு விற்பனை ஆகிறது. அந்த அடிப்படையில் இந்த ஆராச்சர் நிலத்தின் மொத்த மதிப்பு உத்தேசமாக 1500 கோடி ரூபாய் ஆகும். இந்து தமிழர் கட்சி மாநில செயலாளர் கைது செய்யப்பட்டதை கண்டித்து 230924 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு இந்து தமிழர் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த படுவதாக அறிவித்துள்ளனர்.

துலுக்கர்பட்டி

அரசு மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள்

சபாநாயகர் அப்பாவு வழங்கினார்

வள்ளியூர், செப்.22–

வள்ளியூர் அருகே துலுக்கர்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழக அரசுவழங்கிவரும்விலையில்லா மிதிவண்டிகளை வழங்கும் நிகழ்ச்சி தலைமை ஆசிரியர் ஷெர்பின் அருள் தலைமையில் நடைபெற்றது. பட்டதாரி ஆசிரியர் செல்வ கண்ணன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

இதில் தமிழக சட்ட பேரவைத் தலைவா அப்பாவு சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு தமிழக அரசின் 43 விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இதில் மாணவர்களுக்கு 21 மிதிவண்டியும் மாணவிகளுக்கு 22 மிதிவண்டியும் அடங்கும்.

இந்நிகழ்ச்சியில் ஆனைகுளம் ஊராட்சிமன்ற தலைவர் அசன்மைதீன், கண்ணநல்லூர் ஊராட்சிமன்ற தலைவர் மகாராஜன்,ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி அரசு ஒப்பந்ததாரர் ஷேக், பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் அப்ரோஸ் முகைதீன் பாத்திமா, துணைதலைவர் வீ.ராஜன் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் பேசிய சபாநாயகர் தமிழக அரசு மாணவர்கள் கல்வி நலனில் மிகுந்த அக்கறையுடன் செயல்படுகிறது என்றும் கல்வித்திறனை அதிகரிக்க ஸ்மார்ட் வகுப்பறை மூலம் பாடங்கள் பயிற்றுவிக்கபடுகின்றன. புதுமைப்பெண் திட்டம் தமிழ்ப்புதல்வன் திட்டம் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது. இதன் மூலம் கிராமப்புறங்களில் மமாணவ மாணவிகள் உயர்கல்வி பயிலுவதற்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்துள்ளது என்று பேசினார்.

நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் செய்யது அலி , பீவி பாத்திமா, ஏ.செய்யது அலி, ஜரினா, ஜமிலுன் நிஷா, ஹிதாயத்துன்நிஷா. செய்யது யாஸ்மீன் இல்லம் தேடி கல்விதிட்டம் மெர்சிப்ளோரா, வார்டு உறுப்பினர் சண்முகப்பிரியா மற்றும் மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்டனர். உதவி தலைமை ஆசிரியர் அஜிதா அனைவருக்கும் நன்றி கூறினார்.

விருதுநகரில் நடைபெறவிருக்கும் மூன்றாவது புத்தகத்திருவிழாவிற்கு தி இந்தியா சிமெண்ட்ஸ் சார்பில் ரூபாய் 1லட்சத்திற்கான காசோலையினை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் அவர்களிடம் தி இந்தியா சிமெண்டஸ் ஆலை பொறுப்பாளர் கோ. சரவணமுத்து வழங்கினார். அருகில் நிறுவனத்தின் மூத்த மேலாளர் நாராயணசாமி மற்றும் மேலாளர் சித்திரவேல் ஆகியோர் உள்ளனர்.

தெற்கு ரயில்வே பொது மேலாளரிடம் ராபர்ட் புரூஸ் எம்.பி மனு

நெல்லை, செப் 22-

நெல்லை ரயில் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர் எம் சிங்கிடம் பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் நெல்லை ரயில் நிலையத்தில் இருந்து ஆயிரக்கணக்கான பயணிகள் தினமும் பயணிக்கின்றனர் இதனால் அதிக வருவாய் ஈட்டி தரும் ரயில் நிலையமாக விளங்குகிறது நெல்லை ரயில் நிலையத்தில் பயணிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தர வேண்டும் என பொது மேலாளர் இடம் கோரிக்கை விடுத்துள்ளார் நெல்லையை தலைமையாக கொண்டு தனிக்கோட்டை அமைக்க வேண்டும் நெல்லை எக்ஸ்பிரஸ் ரயில் நீங்கலாக கூடுதலாக ஒரு ரயில் சென்னைக்கு இயக்க வேண்டும் அந்தியோ தயா அனைத்துவேலை நாட்களிலும் இயக்க வேண்டும் பாலருவி எக்ஸ்பிரஸ் ரயில் திருச்சியில் இருந்து செல்ல வேண்டும் பெங்களூர் மதுரை வந்தே பாரத ரயிலை நெல்லை வரை நீடிக்க வேண்டும் காவல் கிணறு ரயில் நிலையம் ரூபாய் 18 லட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்டு உள்ளது அங்கு எக்ஸ்பிரஸ் ரயில்கள் நிற்பதில்லை இந்த ரயில் நிலையத்தை சுற்றி 18 கிராமங்களில் சுமார் 2 லட்சம் பொதுமக்கள் வசித்து வருகின்றனர் இஸ்ரோ மையம் கூடங்குளம் அனுமின் நிலையம் உள்ளிட்ட ஒன்றிய அரசின் நிறுவனங்கள் இப்பகுதியில் உள்ளன எனவே பொதுமக்களின் வசதிக்காக கோவை அனந்தபுரி குருவாயூர் ஆகிய ரயில்கள் நின்று செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் வடக்கு பனங்குடியில் உள்ள தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் ஓடுகள் கேரளாவிற்கு செல்கின்றன இங்கு கன்னியாகுமரி கோவை அந்தோதி தயா ரயில் நின்று செல்ல வேண்டும் நாங்குநேரி அருகே கூடன்குளம் பறவைகள் சரணாலயம் உள்ளது இப்பகுதி ஏற்கனவே சிறப்பு பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் இங்கு பெங்களூர் குமரி கோவை திருவனந்தபுரம் இன்டர்சிட்டி மதுரை புனலூர் அந்தியோ தயா ஆகிய ரயிலில் நின்று செல்ல வேண்டும் வள்ளியூரிலும் முக்கிய நிலையில் நின்று செல்ல வேண்டும் என வலியுறுத்தி உள்ளார் இதனை பரிசளிப்பதாக தென்னை ரயில்வே பொது மேலாளர் தெரிவித்துள்ளார் பேட்டியின் போது பாளை வட்டாரத் தலைவர் டி யு சி துரைராஜ் முன்னாள் மாவட்ட தலைவர் தமிழ்ச்செல்வன் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி தலைவர் இசக்கி பாண்டி வள்ளியூர் நகர தலைவர் பொன் பாண்டி மதிமுக வக்கீல் எம் எஸ் சுதர்சன் களக்காடு அம்பை முருகேசன் ஆபிரகாம் லிஸே மைக்கேல் ராம்குமார் ராம சிங் ஆகியோர் உடன் இருந்தனர்

ICICI Home Finance
கார்ப்பரேட் அலுவலகம்: ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ICICI HFC டவர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை 400059 இந்தியா
கிளை அலுவலகம்: 1வது தளம், பிளாட் எண். 8/3, முனிசிபல் காலனி சத்யா மேன்ஷன், கஜிஆர் கிராமம், காங்கயநல்லூர் சாலை, காந்திநகர் கடோடி, வேலூர் 632006
விதி 8(6)க்கான விதியைப் பார்க்கவும்]
அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

நிதிச் சொத்துக்களை பத்திரப்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கத்தின் கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு சட்டம், 2002, பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 (6) உடன் படிக்கப்பட்டது. இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன் வாங்குபவர்கள் மற்றும் உத்தரவாதம் அளிப்பவர்களுக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ளது ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் எடுக்கப்பட்ட, பத்திரமான கடனாளியிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள/கட்டணம் விதிக்கப்பட்ட அசையாச் சொத்துக்கள், "எங்கே உள்ளதோ, அப்படியே", "எதுவாக இருந்தாலும்" விற்கப்படும். உள்ளது", இங்கே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி:

சர். எண்	கடன் வாங்குபவர்கள்/ இணை கடன் வாங்குபவர்கள்/உத்தரவாததாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகளின் பெயர். கடன் கணக்கு எண்.	அறியப்பட்ட சுமைகள் ஏதேனும் இருந்தால், பாதுகாக்கப்பட்ட சொத்தின்(கள்) விவரங்கள்	நிலுவையில் உள்ள தொகை	கையிருப்பு விலை ஈட்டும் பண வைப்பு	சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம்	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்	ஏல தேதிக்கு ஒரு நாள் முன்	SARFAESI நிலை
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)	(ஏ)	(ஐ)
1.	கே கருணா (கடன் வாங்கியவர்) எஸ் ராகவன், பிரைவேட் லிமிடெட் (இணை கடன் வாங்குபவர்கள்) கடன் கணக்கு எண். HCTN00001303242 (இணை கடன் வாங்குபவர்கள்) டைமிக் ஏர்கான்	பழைய சர்வே எண். 526 526வி/1சி2, திருக்கச்சூர் கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் கி/1சி, புதிய சர்வே எண்.	ரூ. 48,33,605/ செப்டம்பர் 10, 2024	ரூ. 31,33,080/ ரூ. 3,13,308/	அக்டோபர் 04, 2024 11:00 முற்பகல் 03:00 பிற்பகல்	அக்டோபர் 10, 2024 02:00 பிற்பகல் 03:00 பிற்பகல்	அக்டோபர் 09, 2024 மாலை 05:00 மணிக்கு முன்(1)	உடல் உடைமை ரூ. 3,13,308/

ஆன்லைன் ஏலம் எங்கள் ஏல நிறுவனமான ஸ்ரீராம் ஆட்டோமால் இந்தியா லிமிடெட். தி மோர்ட்கேகர்ஸ்/ இன் இணையதளத்தில் (URL Link-eauctions.samil.in) நடத்தப்படும்.
அக்டோபர் 09, 2024 மாலை 05:00 மணிக்கு முன் மொத்த நிலுவைத் தொகையை கூடுதல் வட்டியுடன் செலுத்துவதற்கான கடைசி அவகாசம் அறிவிக்கப்பட்டுள்ளது, இல்லையெனில் இந்த பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் இவ்வாறு விற்கப்படும்.மேலே உள்ள அட்டவணைப்படி
வருங்கால ஏலதாரர் (கள்) ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் நிறுவனத்தில் ஈர்னஸ்ட் பண வைப்பு (EMD) RTGS/ டிமாண்ட் டிராஃப்ட் (DD) (நெடுவரிசை ஈ ஐப் பார்க்கவும்) சமர்ப்பிக்க வேண்டும்.
அக்டோபர் 09, 2024 அன்று மாலை 04:00 மணிக்கு முன் கட்டுரையின் மேல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட கிளை அலுவலக முகவரி. வருங்கால ஏலதாரரும் (கள்) சமர்ப்பிக்க வேண்டும் ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில் பதிவுப் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகல் - ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் மேல் குறிப்பிடப்பட்டுள்ளது
அக்டோபர் 09, 2024 அன்று மாலை 05:00 மணிக்கு முன் கட்டுரை. ஈர்னஸ்ட் பண வைப்புத் தேவை வரைவோலை (DD) தேசியமயமாக்கப்பட்ட/திட்டமிடப்பட்ட வங்கியிலிருந்து இருக்க வேண்டும் காஞ்சிபுரத்தில் செலுத்த வேண்டிய "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஏலம்".
ஆய்வு, ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது டெண்டர்களை சமர்ப்பித்தல் தொடர்பான கூடுதல் விளக்கங்களுக்கு, தயவுசெய்து ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும் நிறுவனம் லிமிடெட் 9920807300.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு வேறு எந்த காரணத்தையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்கும் உரிமை உள்ளது.
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://www.icicihfc.com/ ஐப் பார்வையிடவும்

தேதி: செப்டம்பர் 22, 2024
இடம்: காஞ்சிபுரம்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
சிஐஎன் எண்: U65922MH1999PLC120106